**12.02.2026 <u>அசல் வழக்கு எண்.23/2022</u> Starting Time : 3.14 p.m.**

**<u>வா.சா.1</u> திரு. அமாவாசை என்கிற அமாசிகான் த/பெ. தாண்டவராயன்.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாங்கிய நிலத்திற்கு பட்டா மாறுதலுக்காக தாக்கல் செய்துள்ளேன். சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 96 ஆகும். எந்த வகை நிலம் என்றால் புஞ்சை வகை ஆகும். மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 129 சென்ட் ஆகும். மேற்படி 96வது சர்வே எண்ணை என்னுடைய வழக்கில் எத்தானவது அயிட்ட சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் அதுபற்றி தெரியாது. என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பட்டா மாறுதலுக்காக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். யார் பெயரில் சொத்து உள்ளது என்றால் தற்போது விநாயகம் பெயரில் உள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதி தான் வினாயகமூர்த்தி என்றால் சரிதான்.

**2**). பிரதிவாதி வினாயகமூர்த்திக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் அவருடைய அண்ணன் மற்றும் அவருக்கும் ஏற்பட்ட பாகம் மூலம் வந்தது. பிரதிவாதியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சுப்பிரமணி ஆகும். அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகன்கள், ஒரு மகள் ஆவார்கள். அவர்களின் பெயர் முருகன், பிரதிவாதி வினாயகமூர்த்தி மற்றும் பொன்னி ஆவார்கள். பிரதிவாதியின் தாயார் பெயர் என்ன என்றால் மல்லிகா ஆகும். என் உடன் பிறந்த தம்பி தான் சுப்பிரமணி என்றால் சரியல்ல, எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவி, அவரது இன்னொரு மனைவியின் மகன் தான் சுப்பிரமணி ஆகும். மேற்படி விவரத்தை வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

**3**). எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது, கையெழுத்தும் போட தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான், ஆனால் எனக்கு சரியாக போட தெரியாது. கையெழுத்து போட தெரியும், ஆனால் என்ன எழுதியுள்ளேன் என்று தெரியாது. எதில் கையெழுத்து போட சொன்னாலும் நான் போடுவேனா என்றால் என் வழக்கறிஞர் சொன்னதால் கையெழுத்து போட்டேன். நான் வழக்கில் சொல்லியுள்ள எ செட்டியுல் சொத்தின் சர்வே எண் என்ன என்றால்

96 ஆகும், எனக்கு சரியாக சொல்ல தெரியவில்லை. தாவா பி செட்டியுலில் சொல்லியுள்ள சர்வே எண் என்ன என்றால் 96. அதன் விஸ்தீரணம் என்ன என்றால் 129 சென்ட் ஆகும். சி செட்டியுல் சொத்தில் என்ன சர்வே எண் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது.

**4**). எனது தம்பி சுப்பிரமணி எப்போது காலமானார் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். அவர் உயிருடன் இருந்தபோது எனக்கும் அவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான், பாகம் பிரிக்கப்பட்டபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. பாகப்பிரிவினை எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் நடந்தது என்றால் தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. எனது தம்பி சுப்பிரமணி காலமான பிறகு தான் அவரது மகன்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வினாயகமூர்த்திக்கும் அவரது அண்ணனுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் எனக்கு 27 சென்ட் கொடுத்ததற்கு நான் பணம் கொடுத்தேன், அப்போது அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

**5**). இராம கவுண்டர் யார் என்றால் என் சித்தப்பா ஆவார். அவருக்கு எத்தனை மகன்கள் என்றால் இரண்டுபேர் சித்திரவேல், பிச்சாண்டி ஆவார்கள். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் சித்திரவேல், பிச்சாண்டி கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான். முருகனுக்கு மேற்படி பாகப்பிரிவினையில் எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 64 சென்ட், 20 சென்ட், 14 சென்ட், நஞ்சையில் 70 சென்ட், கிணறு பாகத்தில் 3 அல்லது 4 சென்ட் ஒதுக்கப்பட்டது. 1ம் பிரதிவாதி வினாயகமூர்த்திக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் 50 சென்ட், 14 சென்ட், கழனி பக்கம் 30 சென்ட்டும், கிணறு பாகத்தில் 3 அல்லது 4 ஒதுக்கப்பட்டது.

**6**). இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களானது யாருக்கு பாகமாக சென்றது என்றால் முருகனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து ஆகும். மேற்படி பாக ஆவணத்தில் நானும் கையெழுத்து செய்துள்ளேன், சித்திரவேல், பிச்சாண்டியும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்படுத்தும்போது எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். இராம கவுண்டர் மகன் சித்திரவேல், பிச்சாண்டியிடம் இருந்து நான் எவ்வளவு கிரயம் பெற்றேன் என்றால் 1.30ல் இருந்து 64 சென்ட் கிரயம் பெற்றுள்ளேன். அதன் சர்வே எண் என்ன

என்றால் 96 ஆகும். எந்த ஆண்டு கிரயம் பெற்றேன் 1998ல் கிரயம் பெற்றேன். மேற்படி கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு நான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

**7**). நான் இராம கவுண்டர் மகன்கள் சித்திரவேல், பிச்சாண்டியிடம் இருந்து சர்வே எண்.105/2ல் 35 சென்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சுப்பிரமணி மேற்படி சித்திரவேல், பிச்சாண்டியிடமிருந்து எந்த சொத்தை கிரயம் பெற்றார் என்றால் அவர் அப்படி எதுவும் கிரயம் பெறவில்லை. நான் 1ம் பிரதிவாதியிடம் இருந்து எவ்வளவு சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் 35 சென்ட் கிரயம் பெற்றேன். அதன் சர்வே எண் என்ன என்றால் 105/2 ஆகும். 09.06.2000 தேதியில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பிரமணியன் என்பவர் எட்டியப்பன் என்பவரிடமிருந்து சர்வே எண்.95/2ல் 35 சென்ட்டும், சர்வே எண்.96/1சி-ல் 64 1/2 சென்ட்டும் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

**8**). இன்றைய தேதி வரை பட்டா எண்.875 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அதனால் தான் நான் வழக்கு போட்டுள்ளேன். எனது வழக்குரையில் 1ம் பிரதிவாதி என்னை அடித்து மிரட்டுகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு அவர் மிரட்டவில்லை. 1ம் பிரதிவாதி மீது காவல்நிலையத்திலாவது என்னை மிரட்டுவதாக புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**Ending time : 3.51 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.